ஆண்டு பட்டிகை வழக்கு எண்.100/2023

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 100/2023 LW– 1 PW– 1

| | |
|---|---|
| Name | : ராஜா (புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : ஏகாந்தம் |
| Village | : பண்ணியாமலை |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 49/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 7th day of December 2023

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 12.50 P.M. – 1.56 P.M.

( 1 முதல் 8 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். )

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன் . ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊர்காரர்கள். கடந்த 07.05.2020ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில் என் தங்கை சித்திராவின் மகன் ஜெயச்சந்திரன் என்பவர் தலை மற்றும் காதில் பலத்த இரத்தக்காயத்துடன் வந்தார் . அவரிடம் என்ன நடந்தது என்று விசாரித்தபோது, கடந்த 06.05.2020ம் தேதி எங்கள் ஊர் மந்தையில் வைத்து ஸ்ரீதர் மற்றும் திருமலை ஆகியோர் ஊரில் உள்ளவர்களிடம் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்ததை ஜெயச்சந்திரன் கைபேசி மூலம் படம் எடுத்து மற்றவர்களின் கைபேசிக்கு அனுப்பியதாகவும் அதனால் , எதிரிகள் ஜெயச்சந்திரனை அடிக்க திட்டமிட்டிருந்ததாகவும் கூறினார்.

2) இந்நிலையில், 07.05.2020ம் தேதி என் தங்கையின் கணவர் குருசாமியும் , ஜெயச்சந்திரனும் இருசக்கர வாகனத்தில் அவருடைய தோட்டத்திற்கு சென்றபோது ,

இரவு 10.00 மணிக்கு பிரேம் என்பவர் கம்பை வைத்து என் தங்கை மகன் ஜெயச்சந்திரனின் தலையில் அடித்து பலத்த இரத்தக்காயம் ஏற்படுத்தியதாகவும், சுரேஷ் என்பவர் ஜெயச்சந்திரனின் வலதுபக்க காதில் கையால் அடித்து இரத்தக் காயப்படுத்தியதாகவும், ஸ்ரீதர் என்பவர் ஜெயச்சந்திரனின் இருசக்கர வாகனத்தை கீழே தள்ளிவிட்டு கையால் முதுகில் குத்தியதாகவும் , அதை பார்த்த குருசாமி அவர்களை விலக்கிவிட்டு ஜெயச்சந்திரனை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்ததாக கூறினார்.

3) நான் காயம்பட்ட ஜெயச்சந்திரனை எனது TN 38 BH 8704 என்ற பதிவெண் கொண்ட Bolero வாகனத்தில் ஏற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, வழியில் சிறுகுடி தார்ரோட்டில் பிரேம் என்பவர் வீட்டின் அருகில் வந்தபோது பிரேம், ஸ்ரீதர், அண்ணாமலை, வெண்ணிலா ஆகியோர் இரும்பு பைப்புடன் வந்து எங்கள் வாகனத்தை மறித்து , இரும்பு பைப்பால் எனது வாகனத்தின் முன்பக்க கண்ணாடியில் அடித்துவிட்டார்கள், அதில் என் வாகனத்தின் கண்ணாடியில் கீறல் ஏற்பட்டது. வெண்ணிலா என்பவர் வாகனத்திற்குள் இருந்த ஜெயச்சந்திரனை கதவை திறந்து வெளியில் இழுத்தார். சுரேஷ் என்பவர் வாகனத்தின் கதவை அடைத்து இரும்பு பைப்பால் அடித்து சேதப்படுத்தினார்.

4) பின்னர் பழனி, ராஜேந்திரன், சின்னதம்பி ஆகியோர் கல்லைதூக்கி வாகனத்தின் பின்புற கண்ணாடியில் போட்டு உடைத்துவிட்டார்கள் . அவர்கள் அனைவரும் அசிங்கமாக பேசி ஜெயச்சந்திரனை வாகனத்திலிருந்து இறக்கிவிடுமாறும், உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்றும் மிரட்டினார்கள் . பின்னர் எனக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி அங்கிருந்து தப்பித்து நத்தம் அரசு மருத்துவமனைக்கு வந்து ஜெயச்சந்திரனை சிகிச்சைக்கு சேர்த்தேன் . பின்னர் எங்கள் ஊரிலுள்ள சக்தி என்பவரின் ஆட்டோவில் எதிரிகள் அனைவரும் ஏறி மருத்துவமனைக்கு வந்து கெட்ட வார்த்தைகளால் அசிங்கமாக பேசினார்கள்.

5) அப்போது பிரேம் மற்றும் மணிகண்டன் ஆகியோர் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். அதை பார்த்த மருத்துவர் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி இரண்டு போலீசார் வந்து என்னை காவல் நிலையம் அழைத்து சென்றார்கள் , நான் காவல் நிலையத்தில் வைத்து புகார் மனு எழுதிக்கொடுத்தேன் . என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்தது தான், அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மருத்துவமனையிலிருந்தபோது, எதிரிகள் என்னை பார்த்து வெளியில் வாடா , உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

6) காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தபோது , என்னுடன் யார், யார் வந்தார்கள் என்றால் யாரும் வரவில்லை , நான் மட்டும் தான் சென்றேன் . புகாரை நான் கைப்பட எழுதினேனா என்றால் ஆமாம். நான் சொல்வது தவறு 20.05.2022 அன்று என்னிடம் வெற்றுத்தாளில் கையெழுத்து வாங்கிக்கொண்டு அதில் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல . புகாரில் உள்ள வாசகங்கள் என்னால் எழுதப்பட்டவை அல்ல என்றால் சரியல்ல . சாட்சி ஜெயச்சந்திரன் எனது தங்கை மகன் என்றால் சரி . ஜெயச்சந்திரனை மருத்துவமனையில் சேர்த்தபோது, சிகிச்சைக்கு அழைத்து வந்த நபர் என்று எனது பெயரை எழுதினார்களா என்றால் எழுதினார்களா என்று எனக்கு தெரியாது.

7) நான் கொடுத்த புகார் மனுவில் 06.05.2020 ம் தேதி ஜெயச்சந்திரன் தோட்டத்திற்கு போகும்போது, ஸ்ரீதர் மற்றும் திருமலை ஆகியோர் அவரை மோட்டார் சைக்கிளில் இருந்து தள்ளி அடித்து காயப்படுத்தியதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதேபோல், 06.05.2020 ம் தேதி ஸ்ரீதர் மற்றும் திருமலை ஆகியோர்கள் கிராமத்திலுள்ளவர்களை ஆபாசமாக பேசியதை ஜெயச்சந்திரன்

கைபேசியில் படம்பிடித்து மற்றவர்களுக்கு பகிர்ந்ததால் முன்விரோதம் ஏற்பட்டது என்று என் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை.

8) நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரிலும் , பிரேம் என்பவர் வீட்டிற்கு வரும்போது இரவு 11.00 மணிக்கு இந்த சம்பவம் நடந்தது என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . ஜெயச்சந்திரனுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து அவர் நத்தம் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . அதேபோல், நான் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரிலும் , போலீசாரின் விசாரணையிலும் ஜெயச்சந்திரன் என்னிடம் எதிரிகள் என்னையும் அடிக்கபோவதாக சொன்னார்கள் என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

9) 07.05.2020ம் தேதி ஜெயச்சந்திரன் இரவு 10.30 மணியளவில் எதிரிகளின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அவரை கீழ்தரமான வார்த்தைகளால் திட்டி கொலை செய்துவிடுவதாக மிரட்டி, மற்ற பெண்களையும் மானபங்கப்படுத்தி, கத்தியால் சுரேஷ் என்பவரை வயிற்றில் குத்தி பனியனில் இரத்தக்காயம் ஏற்பட்டதாக ஜெயச்சந்திரன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இதே நீதிமன்றத்தில் CC,No,20/2023 ஆக வழக்கு கோப்பிற்க எடுக்கப்பட்டு இன்று விசாரணைக்காக போடப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. சுரேஷ் என்பவரை தாக்கிவிட்டு ஜெயச்சந்திரனை தப்பிப்பதற்காக நான் ஏற்கனவே மறைவில் நிறுத்தி வைத்திருந்த Bolero TN 38 BH 8704 என்ற வாகனத்தில் ஏற்றிக்கொண்டு அதிவேகமாக ஓட்டி பிரேம்குமார் என்பவருடைய வீட்டிற்கு எதிரிலுள்ள பாலத்தில் மோதி விபத்துக்குள்ளாகி அவருக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

10) நானும், ஜெயச்சந்திரனும் மருத்துவமனைக்கு செல்லும போது நத்தம் காவல் நிலையத்தை தாண்டி தான் சென்றோம் என்றால் ஆமாம். அப்போது நேரம் இரவு 11.00 மணி இருக்கும். எதிரிகள் தாக்கியதால் எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை .

வாகனம் விபத்திற்குள்ளாகி தான் வாகனத்திற்கு சேதமும், ஜெயச்சந்திரனுக்கு காயமும் ஏற்பட்டது என்பதால் நான் எனது வாகனத்தை காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

11) காவல்நிலையத்தில் எனது வாகனத்தை கைப்பற்றி வாகன தணிக்கைக்கு அனுப்பி சேதச்சான்றிதழ் பெறவில்லை என்றால் , அப்போது மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் இயங்காததால் காவல்துறையினர் வேண்டாம் என்று சொல்லி போட்டோ எடுத்துக்கொண்டார்கள். மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் இயங்கவில்லை என்று காவல்துறையினர் சொன்னதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுரேஷ் என்பவர் கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக நானும் , ஜெயச்சந்திரனும் திட்டமிட்டு பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. சுரேஷ் என்பவர் வீட்டிற்கும் , வழக்கின் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், சுமார் 100 அல்லது 200 அடி தூரம் இருக்கும்.

12) நான் சொல்வது தவறு , சுரேஷ் வீட்டிற்கும், சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் 2 பர்லாங் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல . சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் , நத்தம் அரசு மருத்துவமனைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 7 கி.மீ இருக்கும். எங்கள் ஊரைச் சுற்றி நிறைய வெள்ளை சுண்ணாம்பு கல் குவாரி இருக்கிறது என்றால் சரி . நான் அரசு அனுமதியில்லாமல் குவாரியில் கல் எடுப்பதாக என் மீது கனிம வளத்துறையில் பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பொய்யானது . எனக்கு நத்தம் மருத்துவமனை மற்றும் நத்தம் காவல் நிலையத்தில் அதிக செல்வாக்கு உள்ளது என்றால் பொய்யானது.

13) நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து சுமார் எத்தனை நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள் என்றால் , நான் புகார் கொடுத்த 7ம் தேதி அன்று இரவே என்னை விசாரித்துவிட்டார்கள் . எதிரிகளை காவல்நிலையத்தில் விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது . 08.05.2020ம் தேதி அதிகாலை 2.00 மணியளவில்

என்னை காவல்துறையினர் விசாரித்தார்கள் என்றால் ஆமாம் . ஜெயச்சந்திரனுக்கு வாகன விபத்தில் காயம் ஏற்பட்டதால் , அவர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

14) நான் கனிமம் மற்றும் சுரங்கங்கள் சம்பந்தமாக பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாக கூறி எதிரிகள் என்மீது திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளிடம் கொடுத்த புகாரின்பேரில் என்னை விசாரித்தார்கள் என்றால் இல்லை, அது பொய். Bolero ஜீப்பிற்குள் இரத்தம் படிந்திருந்ததா என்றால் இல்லை . ஜெயச்சந்திரன் அணிந்திருந்த ஆடைகளில் இரத்தம் வடிந்திருந்ததா என்றால் வடிந்திருந்தது. அந்த ஆடைகளை காவல்துறையினர் கைப்பற்றினார்களா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. எதிரிகள் கம்பியாலோ, கற்களாலோ ஜெயச்சந்திரனை அடித்து காயப்படுத்தக்கிடையாது , அந்த ஆயுதங்களால் எனது ஜீப்பை அடித்து சேதப்படுத்தக்கிடையாது என்றால் சரியல்ல.

15) இந்த வழக்கு சம்பந்தமாக காவல்துறையினர் ஜெயச்சந்திரனை விசாரித்தார்களா என்றால், 4 நாட்கள் கழித்து நத்தம் காவல்துறையினர் மதுரை அரசு மருத்துவமனை சென்று ஜெயச்சந்திரனை விசாரித்தார்கள் . வழக்கு சம்பவத்தன்று நானும் , ஜெயச்சந்திரனும் அதிக மதுபோதையில் இருந்தோம் என்றால் இல்லை . நான் புகார் கொடுத்தபோதோ, என்னை காவல்துறையினர் விசாரித்தபோதோ , ஜெயச்சந்திரனை விசாரித்தபோதோ காவல்துறையினர் ஜெயச்சந்திரன், சுரேஷை கத்தியால் குத்தியதை பற்றி கேட்டார்களா என்றால் இல்லை . நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, எதிரிகள் என்னை கீழ்தரமான வார்த்தைகளால் திட்டவில்லை , என்னை கொலை செய்வதாக மிரட்டவில்லை, ஜெயச்சந்திரனை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

16) காவல்துறையினரை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றேனா என்றால் , நான் அழைத்து செல்லவில்லை, அவர்களே 13.05.2020 அன்று சம்பவ இடத்திற்கு வந்து

சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள் . சம்பவ இடத்தை பார்த்து குறித்துக் கொண்டார்கள். போலீசார் சம்பவ இடத்திலிருந்த இரண்டு பாலங்களை குறித்து எழுதிக் கொண்டார்களா என்றால் நான் கவனிக்கவில்லை . நானும், ஜெயச்சந்திரனும் அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள் என்பதால் சுரேஷ் என்பவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்த காயச்சான்றிதழை அழித்துவிட்டோம் என்றால் இல்லை.

17) ஜெயச்சந்திரனுக்கு எந்த இடத்தில் வைத்து காயம் ஏற்பட்டது என்றால் , வீட்டிலிருந்து தோட்டத்திற்கு செல்லும் வழியில் ஏற்பட்டது, வீட்டிலும் ஏற்படவில்லை, தோட்டத்திலும் ஏற்படவில்லை . நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை , சாட்சி சொல்ல –சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு , என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு , சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

V UDAYASURIYA

Digitally signed by V UDAYASURIYA
Date: 2023.12.07 21:46:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்